ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

अकरुणत्वमकारणविग्रहः परधने परयोषिति च स्पृहा ।
सुजनबन्धुजनेष्वसहिष्णुता प्रकृतिसिद्धमिदं हि दुरात्मनाम् ॥ भर्तृहरिः ।

𑌅𑌕𑌰𑍁𑌣𑌤𑍍𑌵𑌮𑌕𑌾𑌰𑌣𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌪𑌰𑌧𑌨𑍇 𑌪𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌿 𑌚 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 । 𑌸𑍁𑌜𑌨𑌬𑌨𑍍𑌧𑍁𑌜𑌨𑍇𑌷𑍍𑌵𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌿𑌦𑌂 𑌹𑌿 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ॥ 𑌭𑌰𑍍𑌤𑍃𑌹𑌰𑌿𑌃 ॥

பிறர் கஷ்டப்படுவதைப்பார்த்தும் அற்பம்கூட தயையில்லாமல் அவருக்குக் கஷ்டத்தையே கொடுப்பதும், காரணமின்றி அனுவசியமாய் பிறருடன் கலகம் புரிவதும், பிறருடைய தனத்திலும், பரஸ்திரீகளிடங்களில் ஆசைப்படுவதும், தம் பந்துஜனங்களிடமும், மற்றும் பண்டிதர்களான பெரியார்களிடமும் அவர்களுக்கிருக்கும் பெருமையை ஸஹியாது தூஷிப்பதும் கெட்ட சித்தமுடைய துஷ்டர்களுக்கு இயற்கையாயுள்ளதே.

இதனால் துஷ்டஜனங்களோடு பழக்கம் ஸாதுஜனங்களுக்குக்கூடாதென்றும், அதை அறவே விலக்கவேண்டுமென்றும், கருதி துர்ஜனங்களுடைய லக்ஷணத்தை யறிவித்திருக்கிறார்.

ஒருசமயம் சிறந்த வித்யை இருந்தால், அவன் துர்ஜனனாயிருந்தாலும், அவனிடம் நாம் பழக்கம்வைத்துக்கொள்ளாமல் அவனை விலக்குவது உசிதமாகுமா? என்று சிலருக்கு ஐயமுண்டாகலாம். அவனையும் நாம் விலக்குவதுதான் உசிதம். இந்த அபிப்பிராயத்தையே.

दुर्जनः परिहर्तव्यो विद्ययालंकृतोऽपि सन् ।
फणिना भूषितः सर्पः किमसौ न भयङ्करः ॥

𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌽𑌲𑌂𑌕𑍃𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌫𑌣𑌿𑌨𑌾 𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 𑌸𑌰𑍍𑌪𑌃 𑌕𑌿𑌮𑌸𑍌 𑌨 𑌭𑌯𑌂𑌕𑌰𑌃 ॥

ஸர்ப்பமானது சிறந்த சிரோரத்தினத்தால் அலங்கிருதமாயிருந்தாலும், அது எப்படி நமக்குப்பயத்தை யுண்டுபண்ணுகிறதோ அவ்விதமே துஷ்டஸ்வபாவமுடையவ, வித்யை என்னும் ரத்னத்தால் அலங்கரிக்கப்பட்டவனாயிருந்தாலும், விலக்கத்தகுந்தவனேயன்றி, அவனுடன் பழகுவதற்கு அருகனல்லன் என்று ஒரு பெரியாரும் கூறுகின்றார். ஆகையால். துஷ்டனென்று நன்கு தெரிந்தால், அவன் பழக்கத்தை விலக்குவதுதான் உசிதம் என்று அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

க்ஷய௵ தை௴ ௨௧௪

## ஆர்யமதஸாரஸங்கிரகம்.

श्रुतिस्मृतिसदाचारा जीवन्तु जगतीह नः ।
वैदिके पथि वर्तन्तां विश्वासादखिला जनाः ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌾 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍁 𑌜𑌗𑌤𑍀𑌹 𑌨𑌃 ।
𑌵𑍈𑌦𑌿𑌕𑍇 𑌪𑌥𑌿 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌦𑌖𑌿𑌲𑌾 𑌜𑌨𑌾𑌃 ॥

இவ்வுலகில், சுருதி, ஸ்மிருதி அவைகளில் கூறப்பட்ட சிறந்த, ஆசாரங்கள் இவையாவும் பிரகாசித்துக்கொண்டிருக்கட்டும்; ஸகல ஜனங்களும் நம்பிக்கையுடன் வைதிக மார்க்கத்தில் ஸஞ்சரிக்கட்டும்.

गुरुशिष्यसम्प्रदाये दूरोत्सन्ने कलेर्बलादखिले ।
श्रुतिरियमियमिह च स्मृतिरयमर्थस्तत्वमेतदिति नष्टम् ॥

𑌗𑍁𑌰𑍁𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍇 𑌦𑍂𑌰𑍋𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑍇 𑌕𑌲𑍇𑌰𑍍𑌬
𑌲𑌾𑌦𑌖𑌿𑌲𑍇 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑌿𑌯𑌮𑌿𑌯𑌮𑌿𑌹 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑌯𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑍇
𑌤𑌦𑌿𑌤𑌿 𑌨𑌷𑍍𑌟𑌮𑍍 ॥

கலியின் கொடிய செய்கையால், குரு சிஷ்யன் என்கிற வழக்கமானது வெகு தூரத்தில் விலகிவிட்டது. சுருதி என்றால் இன்னது ஸ்மிருதி என்றால் இன்னது, அவைகளுடைய உண்மையான அர்த்தம் இன்னது என்கிற இவையாவும், நஷ்டமாய்போய் விட்டது.

वर्णास्तदीयधर्मा वेदविभागस्तदर्थविवृतिश्च ।
आचारा अपि चैषामुपदेष्टारश्च नवनवा जाताः ॥

𑌵𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌤𑌦𑍀𑌯𑌧𑌰𑍍𑌮𑌾 𑌵𑍇𑌦𑌵𑌿𑌭𑌾𑌗𑌸𑍍𑌤𑌦𑌰𑍍𑌥𑌵𑌿𑌵𑍃𑌤𑌿𑌶𑍍𑌚 ।
𑌆𑌚𑌾𑌰𑌾 𑌅𑌪𑌿 𑌚𑍈𑌷𑌾𑌮𑍁𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑌾𑌰𑌶𑍍𑌚 𑌨𑌵𑌨𑌵𑌾 𑌜𑌾𑌤𑌾𑌃 ॥

ஜாதிகளும் அவைகளுக்குற்ற தர்மங்களும் வேதங்களின் பிரிவுகளும் அவைகளுக்குக் கருத்துரைப்பதும், ஜனங்களுடை ஆசாரமும், உபதேசிக்க முன்வந்திருக்கும் குருக்களும் புதிதுபுதிதாக ஏற்பட்டிருக்கின்றன.

आधुनिकैऋषिमानिभिरारब्धाः केपि केपि च ग्रन्थाः ।
किमिह वचोभिरनेकैरधरोत्तरमार्यपूर्वमतमखिलम् ॥

ஆதுநிகைர்ருஷிமாநிபிராரப்தா: கேபி கேபி ச க்ரந்தா:
கிமிஹ வசோபிரநேகைரதரோத்தரமார்யபூர்வமதமகி
லம் ॥

தம்மை, வஸிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளாக எண்ணிக்கொண்டிருக்கிற தற்காலத்திய சில ஜனங்களால் இவ்விதமென்று கூறவியலாத பற்பல கிரந்தங்கள் எழுதத்துவக்கப்பட்டிருக்கின்றன. பலவாறுன வார்த்தைகளால் அதிகம் விரிப்பதில் யாதுபயன் ஆர்யர்களுடைய வெகுகாலமாய் நடைபெற்றுவந்த சுருதிஸ்மிருதிகளின் கருத்தைப்பின்பற்றி விளங்கிய ஸகல மதங்களும் முற்றிலும் மாறுதலையடைந்துவிட்டன.

ஆரியவம்சத்தில் உதித்த ஒரு மனிதன் முன் ஜன்மாக்களில் செய்த புண்யத்தால் மேற்கூறும் விதமாகவே நற்கதியடைய முயலவேண்டும்.

(1) முதலில் பலவிதமான மதங்களும் சாஸ்திரங்களும்மதாசார்யர்களும் அவரவர்களால் செய்யப்படும் ஈசுவரமூர்த்தி பேதங்கள் பல இருந்தபோதிலும் பாமார்த்தமான விரோதம் இல்லையென்று ஸமாதான புத்தியுடன் பிறமதம் பிறசாஸ்திரம் என்கிற அஸூயை விலக்கிக்கொள்ளவேண்டும்.

(2) பிறகு புத்திரன், மித்திரன், பொருள், தான்யம்,வீடு, பூமி, சரீரம், இந்திரியங்கள், இவை முதலானவைகளால் உண்டாகும் இம்மைப்பயனே பெரியபுருஷார்த்தமேயன்றி பின்னொன்றில்லையென்கிற நாஸ்திக்யத்தை விலக்கி ஆமுஷ்மிகசுகமேபெரிதென்றுகருதி அதையடைய விரும்பவேண்டும்.

(3) அவ்விதம் சிறந்ததான ஆமுஷ்மிக புருஷார்த்தத்தை நம்முடைய முயற்சியாலேயே அடையக்கூடிய ஸ்வாதந்திரியம்

நமக்குண்டா அல்லது எல்லாம் விதிபோலவே நடக்கும் நாம் பர தந்திரர்கள் என்பது உண்மையா? என்று விசாரித்தால் மனிதர்களுக்கு ஸ்வாதந்திரியத்தை முன்னிட்டே ஸகல சாஸ்திரங்களும் ஏற்பட்டிருப்பதால் நமது முயற்சியால் எவ்வித புருஷார்த்தத்தையும்பெற்றுவிடலாமென்கிற திண்ணமான உறுதிபெறவேண்டும்

4. இவ்விதம் த்ரிடமான உருதிகொண்ட ஒரு மனுஷ்யன் அதற்குற்ற உபதேசம் பெறவேண்டிய நிமித்தம் ஆசார்ய இலக்கணம் இன்னதென்று தெரிந்துகொண்டு அவ்வித இலக்கணம் பொருந்திய ஒருவரிடம் சென்று அடிபணிந்து சிஷ்யனுடைய லக்ஷணத்தைத்தெரிந்துகொண்டு அவ்விதிப்படி நடக்கவேண்டும்.

உபபத்திராதிபர்.

---

# வித்வத் சிரோமணி மண்டலம்.

## சிதம்பரம்.

சென்ற டிஸம்பர்மீ 19உ ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு இம் மண்டலத்தின் ஆதிரவின் கீழ் ஓர் கூட்டம் கூடிற்று. அங்கு திருவையார் பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் ஷையூர் பிர்மஸ்ரீ வைத்தினாதசாஸ்திரிகள் கருங்குளம் பிர்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள், போல்கம் ஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் ஷையூர் ஸ்ரீ ராமாசாஸ்திரிகள்; சேங்காலிபுரம் ஸ்ரீ வைத்தினாத சாஸ்திரிகள், ஸ்ரீ ராமாசாஸ்திரிகள், மதுரை ஸ்ரீராமசுப்பிரமணிய சாஸ்திரிகள், அம்மங்குடி ஸ்ரீபரமேசுவர சாஸ்திரிகள், ஸ்ரீதண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதாள, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், முதலிய பண்டித சிரேஷ்டர்கள்பலரும் லௌகிகப் பிரபுக்களனேகரும் கூடியிருந்தனர்.

அவ்வமயம் சென்னை சர்வகலாசாலை வடமொழிப் புலவர் S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் M. A. I.E.S. அவர்கள் அக்கிராஸனம் வகித்து "ஸம்ஸ்கிருத வித்யையும், பண்டிதர்களும்" என்ற விஷயத்தைப் பற்றி உபன்யஸித்தார்கள். அதாவது:—

பண்டிதசிரேஷ்டர்களே! சுமார் 25 வருஷங்களுக்குமுன் நமது மாத்ருபாஷையான ஸம்ஸ்கிருதம் மிகச்சீர்கேடான நிலையை அடைந்திருந்தது. ஸம்ஸ்கிருத பாஷையைப்பயின்று சாஸ்திரங்களில் தேர்ச்சியுடையவர்கள் மிகக்குறைவுபட்டிருந்தனர், ஒரு சாஸ்திரத்தில் நன்கு தேர்ச்சியடைந்தவர்

நூற்றுக்கொருவர்கூடக் கிடைப்பதரிதாயிற்று, புதிதாய் சாஸ்திரத்தைப் பயில்பவர்களோ பல காரணங்களாலும் ஓர் சாஸ்திரத்தின் ஓர்சிறிது பாகத்தைமாத்திரம் பயிலத்தலைப்பட்டனர், உதாரணமாக வியாகரணம் படிப்பவர்கள் சேகரம் முதலியவைகளில் காரகாந்தமும். மஹாபாஷ்யத்தில் நவான்ஹிகமும் மாத்திரம் வாசிக்கத்தலைப்பட்டனர், இம்மாதிரியே வேதாந்தத்தில் பிரஸ்தானத்ரயம் பாஷ்யங்களையும் வ்யாக்யானம் சதுஸ்ஸூத்ரீ வரையிலும் மாத்திரம் படிக்க ஆரம்பித்தனர், ஒரு சாஸ்திரத்தையாவது முடியக் கற்பதென்ற ஸம்பிரதாயம் நின்று விட்டது, பண்டிதர் என்ற சொல்லுக்குகற்ற பொருள் இல்லாமற்போயிற்று. ஆங்கல கலாசாலைகளில் அதனதிகாரிகளின் தயவினால் லப்தஜீவிகாளான ஸம்ஸ்கிருதம் போதிக்கும் அல்பக்ஞர்கள்கூடபண்டிதர்களெனப்பட்டமடைந்தனர், அந்தோ! ஒன்றுமறியரலௌகிகர்கள் ஸம்ஸ்கிருத அக்ஷரமறிந்தவர்களைக்கூட பண்டிதர்களென அழைக்கத் தலைப்பட்டனர், இப்பண்டித சப்தம் இவ்வளவு ஸாமான்யமாகவே, வித்வத் ஸபைகளிலும் ஆஸ்தானங்களிலும் திலகமாய் விளங்கும் வித்வத்சிரோமணிகளில் இப்பண்டித சப்தத்தின் நிலைமை நினைத்து மனம் நோகாதார்யார்?

ஆதலால் இச்சீர்கேட்டை போக்குவதன் நிமித்தம் ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடையவும் ஸ்ரீமான் P. S. சிவஸ்வாமி அய்யர் அவர்களுடையவும் முக்கிய முயற்சியால் விசுவவித்யாலயத்தில்கீழ்நாட்டுப்ப்ட்டப் பரீக்ஷைகள் எற்படுத்தப்பட்டன, வடமொழியில் ஒரு சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றவருக்கு 'சிரோமணி' என்ற பட்டமும் தேசியமொழியில் தேர்ச்சிபெற்றவருக்கு 'வித்வான்' என்ற பட்டமும் அளிப்பதாய்த் தீர்மானிக்கப்பட்டன.

சுமார். 200 வருஷங்களுக்கு (அதாவது கதாதரபட்டருடைய காலத்திற்கு) முந்தினவர்களை நாம்பிராசீனபண்டிதர் என வியவஹரிக்கலாம், அவ்வாறான பிராசீனப்பண்டிதர்கள்கூட எகமுகபாண்டித்யத்தையே கைக்கொண்டனர்,

नमः प्रामाण्यवादाय मम वित्तापहारिणे ।

𑌨𑌮𑌃 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌵𑌾𑌦𑌾𑌯 𑌮𑌮 𑌵𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑍇 ।

என்று சொல்லுமோர் வித்வான் தன்காலத்தை ஒன்றிலேயே செலுத்தினரென விளங்குகிறது. அவ்வாறு ஒரே சாஸ்திரத்தைப் பயிலுவதால் பலரும் பல கஷ்டங்களை அடையநேர்ந்தது. கதாதரபட்டனின் கல்பனசக்தியையும் பாண்டித்யத்தையும் பற்றி நான் உங்களுக்குக்கூறவேண்டுவதில்லை, அவ்வளவு அறிஞர்கூட उपसन्नामकचरूकरणक 𑌉𑌪𑌸𑌨𑍍𑌨𑌾𑌮𑌕𑌚

[illegible] என்று எழுதிவிட்டார், பச்சா என்ற நவீனதார்கிகசிரேஷ்டர் ஒருவர் ज्ञाता ஸாதா என்பது மூன்றும் வேற்றுமை என்கிறார். இவ்வாறான கஷ்டங்களுக்கெல்லாம் ஏகமுகபாண்டித்யமே காரணம், இவ்வாறான காரணங்களினாலேயே இப்பட்டப் பரீக்ஷைக்கு ஒரு சாஸ்திரத்தை முக்கியமாகவும் மற்ற சாஸ்திரங்களை அங்கமாகவும் கற்குமாறு பாடப்புத்தகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதனால் தற்காலத்திய பிராசீன பண்டிதர்களைவிட பட்டம் பெற்றவர்கள் மிக்க மேலானவர்கள் எனக்கூறவில்லை, இங்கு வீற்றிருக்கும் பிராசீன பண்டிதர்களான நீங்களே இப்பட்ட பரீக்ஷைக்கு மாணவர்களைத் தயாரிக்கின்றவர்கள், இது காரணம் பற்றியே உங்களுக்கும் முன்பாராத சில கிரந்தங்களை ஊன்றிப்பார்க்கும் அவகாசமேற்பட்டது, உங்களிலுமவர்களைச் சிறப்பித்துக் கூறவில்லை, சிரோமணிப்பட்டம் பெற்றதாலேயே மகாவித்வான்களென இவர்களைக் கருதவில்லை, இப்பரீக்ஷையை ஸ்வரூபயோக்யதாதாபகமென்று மாத்திரம் நாங்கள் கொண்டிருக்கின்றோம், பின்னர் யோக்கியதையை விருத்தி செய்துகொள்ள வேண்டுவதே பட்டாதாரிகளின் முக்கியப் பொருப்பாகும்.

ஸம்ஸ்கிருதகலாசாலைகளில் வேலையில் அமர்பவர்கள் தங்கள் ஞானத்தை நன்றாக விருத்திசெய்து கொள்ளலாம், உண்மையை ஆராயின் எத்தொழிலிலிருப்பினும் உண்மையான அபிருசி சாஸ்திரங்களில் தோன்றின் விருத்திசெய்து கொள்வது கஷ்டமானகாரியமன்று.

இஹபரஸாதகமாயுள்ள நமது ஸ்ரீமத் ஆசார்யாளின் அத்வைத வேதாந்தப் பிரஸ்தான பாஷ்யங்களைஒவ்வோருவரும் பிரதிதினமும் காலையில் குறித்தநேரத்தில் ஏன் பாராயணம் செய்துவரக்கூடாது? தற்காலம் லௌகிக வைதிக உபயானுரஞ்சகமானது அத்வைதவேதாந்த சாஸ்திரம் ஒன்றே, நம்முடைய மதாசாரத்தை நன்கறிந்து பிரசாரம் செய்வதற்கு இஃது இன்றியமையாதது, மற்ற சாஸ்திரங்களைப் பயின்றவர்களும் தாங்கள் கற்றவைகளை ஆராய்ந்து படித்து அதனைப்பிறருக்கும் உபயோகமுறச் செய்யலாம், இவ்வாறு பண்டிதர்களின் சங்கியையதிகரிக்கின் அவர்கள் உன்னதிக்குறிய வழிகளுமேற்படும்,

ஆதுனிகவிமர்சரீதியைஒட்டிக் கிரந்தங்களை விசாரிக்கவேண்டுவதவசியம், ஐதிஹாஸிகபத்ததி விசாரத்தை(Histricad Methed of researo) சில பண்டிதர்கள் மதாசாரபக்தி பஞ்சகமெனக் கருதுகிறார்கள், அது தவறு, விஷய விமர்சத்திற்காக நாம் ஆபேக்ஷிக பௌர்வாபர்யத்தை (ஆபேக்ஷிகப்பிரபஞ்சஸத்தயைப்போல்)ஏற்றுக்கொள்வதுநம்முடையவேதா

பௌருஷேய புத்தியைக் கெடுக்காது, மதாசாரானுஷ்டான பக்த்யாதிகளுக்குக் கேடன்னியில் நாம் இம்முறையைக் கையாளுவது தவறாகாது,

ஓர் பெரிய பண்டிதர் தந்த்ரவார்த்திகத்தைப் பாராமையால் अभिधां भवनामाहुः அபிதாம் பவநாமாஹு: என்ற அபத்தப்பாடத்தைவைத்துக்கொண்டே அர்த்தம் சொல்லிவந்தார், ஒரேவிஷயத்தைப்பல கிரந்தங்களில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. இவர்களில் யார் முதலில் அவ்விஷயத்தைக் கூறியவர் என்று நன்கு ஆராய்ந்து படிக்காமையே இதற்கு க்காரணம், வைதேசிகர்கள் ஆராய்ச்சி முறையைக்கையாண்டுநம்கிரந்தங்களில் மிகவும் பிரயாசைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் சொல்லியுள்ளதில் தோஷங்களுமிருக்கலாம், அவர்கள் புஸ்தகசரணேயல்லாது பல பண்டிதர்களைக் கேட்டறியும் சௌகர்யங்கள் அவர்களுக்கு இல்லை, நாம் குணங்களை மாத்திரம் கிரஹிப்பதில் நோக்கத்தைச் செலுத்தவேண்டும்.

உதாரணமாகடாக்டர்காலன் என்னும்ஜர்மன் மேதாவி தன்னுயுளைச் சிரௌதகிரந்தங்களை விமர்சம் செய்வதிலேயே கழித்துவருகிறார், ஆனாலும் தனக்கு யாகத்தில் அதிகாரமில்லையென்பதையும் தனக்கதனால் உபயோகமில்லை என்பதையும் ஒப்புக்கொள்கிறார். ருக்வேத லக்ஷணத்தை ஒட்டி "पावक" பாவக என்னுமிடமெல்லாம் 'पवाक' பவாக என்றுதான் உச்சரிக்கவேண்டுமென்றும் அப்பொழுதுதான் छन्दस् சந்தஸ் சரியாகவருமெனறும் கண்டு பிடித்திருக்கிறார், இதுபோல் அனேக அறிய பெரிய விஷயங்களை யெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார், நம் தேசத்தில் அவ்வாறு உழைப்பவரைக்காணேம்,

டாக்டர்ஜோலி என்னுமோர் ஜர்மன் கிழவர் நம் தர்மசாஸ்திரங்களை எல்லாம் மேல்நாட்டாருக்கு வெளியிட்டவர் கௌடில்ய அர்த்தசாஸ்திரத்தில் ஓரிடத்தில் समानतन्त्रे उक्तम् ஸமாநதந்த்ரே உக்தம் என்றதற்கு समानतन्त्रम् ஸமாநதந்த்ரம் என்னும் கிரந்தத்தில் என மொழிபெயர்த்தார், இதுதோஷமாகாது, நியாய வைசேஷிகம், ஸங்க்யயோகம் இவைகள்போல அர்த்தசாஸ்திர தர்மசாஸ்திரங்களும் ஸமானதந்த்ரம் என நாம் அறிவோம், மேலும் अशुचिकरनिर्वेश அசுசிகரநிர்வேஶ என்ற இடத்தில் निर्वेश நிர்வேஶ என்பதற்குப்பிராயச்சித்தம் எனப்பொருள் கூறவேண்டியிருக்க निर्वेशो भृतिसोमयोः நிர்வேஶோ ப்ருதிஸோமயோ: என்று அர்த்தம் கூறிவிட்டார், நாம் ஆராய்ச்சி செய்வோமேயானல் அனேகரஹஸ்யங்கள் நமக்குப்புலப்படும். ஆதலால் பட்ட பரீக்ஷையில் தேறினவர்கள்தாம் ஆராய்ச்சி வேலைசெய்வதுடன், பிறபண்டிதர்களுக்கும் அதன் நன்மைகளை நன்கு விளக்கமுறச்செய்ய வேண்டும்.

மூன்று நான்கு வருஷங்களாக 'சிரோமணி' என்னும் பட்டம் உயர்ந்தது, 'வித்வான்' என்னும் பட்டம் தாழ்ந்தது எனசசிலர் கருதுகின்றனர். உண்மையில் அவ்வாறான தோற்றத்திற்குச் சிறிதும் இடமில்லை, தென்மொழியில் வித்வான் பரீக்ஷை தேறியவர்கள் வெகுசிலரே, இதற்கு ஸம்ஸ்கிருத பாஷா ஸம்வரணம் காரணமெனக்கொள்வது மிகத்தவறு, தேசபாஷை பயில்பவருக்கு வடமொழியறிவு இன்றியமையாதது, தொல்காப்பியம் சங்கநூல்கள் தொன்றுதொட்டே வடநூல்களின் மொழிகளும் வழிகளும் தமிழில் புகுந்திருப்பதை நாம் காண்கிறோம், முன்னொருகாலத்தில் ஜயினர்களுக்கும் பிராமணர்களுக்கும் சண்டை எற்படவே ஜயினர்கள் தென்மொழியையும் பிராமணர்கள் வடமொழியையும் பின்பற்றினர், அப்பொழுது துவேஷத்தால் ஜயினர்கள் அனேகம் வடமொழிச் சொற்களை மிக்கப் பிரயாசையுடன் தமிழாக மாற்றினர், ஆனாலும் தென்மொழி வடமொழியுடன் மிக்க நெருங்கிய சம்மந்தமுடையதே, வடமொழியை துவேஷத்தால் விடநேரின் அப்பொழுது தென்மொழியையும் விடவேண்டுவது தான், தென்மொழி, பயில்வோருக்கு வடமொழியறிவு மிக்க அவசியமான தென்பது ஸ்ரீ மஹாமஹோபாத்யாய ஸ்வாமிநாத அய்யர் அவர்களின்மணிமேகலையின் முகவுறையைப் படிப்போருக்கு நன்றாய் விளங்கும்.

எவ்வாறு தேசியமொழியைப் பயின்றோருக்கு வடமொழியில் அறிவு அவசியமோ அதுபோல வடமொழிப் புலவர்களுக்கும் தேசியமொழியறிவு மிக்கஅவசியமாகும் அப்பொழுதுதான் தன் மனத்திற்கொண்ட கருத்தை சொற்களாலும் நூல்களாலும் பிறருக்கு எளிதிலறிவிக்க இயலும்.

ஆதலால் நூதனப்பட்டதாரிகளான நீங்கள் அனைவரும் இருமொழிகளும் பயின்று சிரேயஸ்ஸுடன் வாழ்வீர்களாக—

N வைத்திநாதசாஸ்திரிகள்.

---

குறிப்பு:—கூட்டம் கலைந்த உடன் சேங்காலிபுரம் ஸ்ரீவைத்திநாதசாஸ்திரிகள், தற்காலம் சிரோமணி சிரோமணி என்று விசுவ்வித்யாலயம் பட்டதாரிகளையே எல்லாவிடங்களிலும் கொண்டாடுவதால் என்போன்ற பண்டிதர்களுக்கு என்னவழி' என்றதற்கு, 'கூடியசீக்கிரம் பிரசித்தபண்டிதர்களை ஜாப்தாவெடுத்து அவர்களுக்கும் பரீக்ஷையில்லாமலேயே விசுவவித்யாலயத்தில் நின்றும் கவுரவப்பட்டம் ஒன்று அளிக்குமாறு செய்வதாக' அக்கிராஸநாதிபதி கூறினார்.

# மதிப்புரை.

## ஸ்துதி குஸுமாஞ்சலி.

சென்னை அமரகலாவிலாஸினி ஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ ஸோம தேவ சர்மா அவர்களால் அனுப்பப்பட்ட இப்புத்தகத்தை வரப்பெற்றோம். இதில் ஸரஸ்வதி, கணபதி, சுப்பிரமணியர், பரமேசுவரன், பார்வதீ, ஸ்ரீராமர், விஷ்ணு, கிருஷ்ணன், தசாவதாரம், நரஸிம்மர், ஆஞ்சநேயர், வால்மீகி, வியாஸர், ஸ்ரீ குரு முதலானவர்களுடைய ஸ்தோத்திரங்களும், ராமாயணஸங்கிரஹமும் மற்றும்சிலஸ்துதிகளுமிருக்கின்றன. துவக்கத்தில் ஸம்ஸ்கிருத பாஷையில்பல பெரியோர்களாலியற்றப்பட்டபாடல் ஸ்தோத்திரங்களிலிருந்தும் சிறந்த சுலோகங்களைப் பொருக்கி எடுத்து ஸம்ஸ்கிருத பாஷையில் பையிர்ச்சியில்லாத பாலர்களும் சிவன் விஷ்ணு முதலான தேவதைளின் அனுக்கிரஹத்தைப் பெறவேண்டி அவ்விதமே தமிழ் நடையில் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் பாஷையிலேயே சில பெரியோர்களால் இயற்றப்பட்ட எளிய நடையிலுள்ள ஈசுவரஸ்துதிகளும் இதில் இருக்கின்றன. ஸ்கூலில் படிக்கும் சிறு மாணவர்கள் இப்புத்தகத்தை வாங்கிப் படித்தால் பகவத் பக்தி ஏற்படுவதுடன் தேவதைகளின் அனுக்கிரகத்திற்கும் பாத்திரர்களாகி சிரேயஸ்ஸையும் பெருவார்கள். ஆகையால் பாலர்களுக்கு இப்புத்தகம் மிக்க உபயோகமானது என்று யாரும் கருதக் கூடியதே.

இதில் விலை ரூ. 0—2—0

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா,
சாந்தச்ரமம் 154 தம்புசெட்டி வீதி காந்திநகர்,
சென்னை.

---

திருவாதி தர்க்க சிரோமணி என். வைத்தியநாத சாஸ்திரிகளால் அனுப்பப்பட்டதாயும், கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்கள் ஸந்நிதியில் விளங்கும் ஸ்ரீமதாசார்யாளுடைய அனுக்கிரகம் யாருக்கு ஏற்பட்டாலும் அதை ஆதரவுடன் முன்னின்று வாங்கிக்கொடுக்கும் பாக்கியம் பெற்றதும் त्रिपदी திரிவதீ மூன்று காலுடன் கூடியதுமான ஒரு வெள்ளிப்பாத்திரம் அதைப் பற்றியும் ஸ்ரீ ஜகத்குரு அவர்களுடைய திருக்காத்தையடைந்து ஜன்மஸாபல்யத்தைப்

பெற்ற தண்டத்தைப்பற்றியும், ஸ்தோத்திரமாய் வடமொழியில் எழுதப்பட்ட ஒருகிரந்தம் நம் பார்வைக்குக் கிட்டியது. அதிலுள்ள இலகுவான பதங்களால் அழகான நடையில் எழுதப்பட்ட செய்யுள்களைப் பார்க்க மனஸ்விற்குச் சந்தோஷமாயிருக்கிறது. வடமொழி வித்வான்களுக்கு இது திருப்தியைக் கொடுக்கக்கூடியதே.

ஆர். உபபத்திராதிபர்.

---

## ஸ்ரீ மத்வநவமி மகோத்ஸவ பத்திரிகை.

இச்சபை 1924ஸு ஸ்தாபிக்கப்பட்டு பிரதி பானுவாரந்தோறும் மத ஸம்பந்தமான உபன்யாஸங்களையும் விசேஷமான புண்ணிய தினங்களில் ஹரிகதா காலக்ஷேபம் முதலியவைகளையும் ஏற்பாடு செய்து மாத்வர்களிடையே துவைத மதத்தில் ஞானபிவிருத்தியையும் ஒற்றுமையையும் விருத்தி செய்துகொண்டு வருகிறதென்பதை நமது நேயர்கள் அறிவார்கள் என்று நம்புகிறோம். இதன் ஆதரவில் நாளது பிப்ரவரிமீ 10உ துவைதமதப் பிரதிஷ்டாபனுசாரியரான ஸ்ரீமதாநந்த தீர்த்த பகவத்பாத முனிகள் (ஸ்ரீ மத்வாசாரியார்) மூன்றும் தடவை பதரிகாசிரமம் சென்ற தினமாகிய ஸ்ரீ மத்வநவமி புண்யதினத்தை 5-நாள் வரையில் கொண்டாடுவதாய் நிச்சயித்திருப்பதால் ஷை தினங்களில் நடைபெறும் உபந்யாஸங்களுக்கும் ஹரிகதாகாலக்ஷேபங்களுக்கும் ஸங்கீதக் கச்சேரிகளுக்கும் ஊர்வலத்திற்கும் பிராஹ்மண ஸமாராதனைக்கும் பக்த ஜனங்கள் விஜயம் செய்து ஷை உத்ஸவத்தைச் சிறப்பாய் நடப்பி வைத்து ஸ்ரீமத்பாஷ்யக்காரரின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாக வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ மாத்வஸபா,
கும்பகோணம்.
31—1—1927

A. ஸ்ரீநிவாஸராவ் B.A, B.L.
M. ராமராவ் காரியதரிசி.

---

## தர்மமே ஸர்வஜன க்ஷேமகரம்

இந்த விஷயத்தைப் பற்றி சென்ற தைமீ 13உ (26—1—27) ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தில் திருவாங்கூர் பென்ஷன் திவான் பேஷ்காரும் இண்டியன் திங்கர் பத்திராதிபருமான

பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யாவர்களால் மாலை6-30மணிமுதல் எட்டுமணி வரையில் எளிய தமிழ் நடையில் நன்கு உபர்யஸிக்கப்பட்டது. நம்ஸநாதந தர்மம் நன்கு நடைபெறுவதற்கு ஒற்றுமையே முக்கிய ஸாதனமென்றும் அதன் குறைவால் தான் தற்காலம் தர்மத்திற்குக் குறை ஏற்பட்டிருக்கின்றது. நமக்கு ஒற்றுமையின் அபிவிருத்தி ஏற்பட்டு ஸநாதந தர்மம் எங்கும் பரவவேண்டி ஆங்காங்கு ஸபைகள் ஏற்பட்டு உபன்யாஸங்களும் நடை பெறவேண்டும். இவ்விதம் ஏற்பட்டால் நம் தேசமுன்னேற்றமும் ஜனங்களுக்கு க்ஷேமமும் உண்டாகுமென்பது அவர்கள் உபன்யாஸத்தின் ஸாரமான அபிப்பிராயம். கனம் சுப்பிரமணியய்யாவர்கள் லோக க்ஷேமத்தைக் கருதியே பலவிடங்களிலும் ஸஞ்சாரம்செய்து தமிழ் பாஷையாலும் இங்கிலீஷ்பாஷையாலும் சிறந்த உபன்யாஸங்களைச் செய்து ஜனங்களுக்கு ஸ்நேஹாபிவிருத்தியையும் ஸநாதனதர்மாநுஷ்டாணத்தில் ஊக்கத்தையையும் விருத்தி செய்துவருகிறதாகத் தெரிகின்றது இவ்விதம் நற்காரியத்தில் முயற்சிக்கும் இவர்களுக்கு ரோகமில்லாத திருடமான சரீரத்தையும் தீர்க்காயுளையும் கொடுத்து அனுக்கிரகிக்குமாறு ஸ்ரீ சந்திரமௌளீசுவரரைப் பிரார்த்திக்கிறோம்.

உபபத்திராதிபர்.

---

# ஆர்யதர்மாபிவர்த்தனி ஸபா
# திருக்கோவிலூர் கீழையூர்

20—12—26 ஸோமவாரம் திருவாதிரை தினத்தன்று இச்சபை இரவு 8 மணிக்குக் கூடிற்று. அக்காலம் இச்சபை அங்கத்தினர் பிரம்மஸ்ரீ நடேசய்யர் அவர்கள் பெரியபுராணத்தில் ஸ்ரீ நந்தனார் சரித்திரத்தை இனிது உபந்யஸித்தார்கள். இவ்வுபந்யாஸத்தில் உபந்யாசகர் வெளியிட்ட அரியதோர் ஆராய்ச்சி வருமாறு:—

உபமந்யுபகவான் வடமொழியில் திருவாய் மலர்ந்தருளிய "உபமந்யு பக்த விலாஸம்" என்பதே இதற்கு அம்மொழியில் முதல் நூலென்றும் அவ்வாறே, தென்மொழியில் ஸ்ரீசேக்கிழார் அருளிச்செய்த பெரியபுராண மென்று வழங்குகிற திருத்தொண்டர் புராணமென்ற அரியநூலே முதல் நூல். இதின்படி நந்தனார் ஆதனூரிலுள்ள கல்நெஞ்சம் படைத்த ஓர் வேதியருக்கடிமையாக இருந்திருக்கவில்லை. இவ்விதவேதியரைப்பற்றிய பிரஸ்தாபமே இந்நூலிற்காணோம். நந்தனார் அவ்வூர் சேரியில் பஞ்சம குலத்தில் தோன்றினும், அவர் தோன்றிய குடும்பத்தார் அச்சேரிமுழுமையும் அடக்கியாளும் ஆட்சி உரிமை பெற்றிருந்தனர். ஆகவே ஆண்டவனுக்கன்றி வேறோர் அந்தணனுக்கும் இவரும் எவ்வாற்றாலும் அடிமைப்

யட்டிருந்தனரெனத்தெரியவில்லை. பூர்வஜன்மத்தில் குவிந்திருந்த நல்வினைப்பயனாய் இவ்வுலகில் இவர்தோன்றிய முதலே பரமேச்சுவரன்பால் இவருள்ளத்தில் பேரன்பு ஊறிக்கொண்டிருந்தது. இவர் தன்ஜாதி வரம்பு கடவாத ஒழுக்கமுடையவராய் குலத்தொழிலை சிவார்ப்பணமாகச் செவ்வனே செய்து சிவபெருமானிடம் இடைவிடாப்பக்திசெய்து அவர்பிரஸாதத்தால் தில்லைமூவாயிரத்தவரக்கும் நந்தனார்க்கும் ஒரே இரவில் ஸ்வப்னமானபடி மறுநாட்காலையில் அக்னியில்மூழ்கி சிகை யக்ஞோபவீதத்துடன் தேவதுந்துபி முழங்க ஆகாயத்தினின்று புஷ்பமாரிபெய்ய, வெளியில் வந்து எல்லோரும் புடைசூழ ஆண்டவன் ஸந்நிதிசேர்ந்து சகலரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இறைவனில் இரண்டறக் கலந்து மறைந்தார்.

இதற்குத் தமிழில் முதல்நூலாயுள்ளபெரியபுராணத்தில் இச்சரிதையின் போக்கிவ்வாறிருக்க, இதை முற்றும் கைசோரவிட்டு சில வருஷங்களுக்கு முன்தோன்றிய நந்தனார் சரித்திரக்கீர்த்தனை என்ற தோர்க்ரந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆதனூரில் ஒரு வேதியனைக்கடும் நெஞ்சம் படைத்தவனென கல்பனைசெய்து அவனுக்கடிமையாய் நந்தனாரை மாட்டிவைத்து ஆண்டவனைக்காணப்போகக்கூடாதென வேதியன் சொன்னானெனப்பிதற்றி முதல் வகுப்பார் கடைவகுப்பாரை இருமாப்புக்கொண்டு இவ்விதம்நடத்தினரென அபவாதத்தை அநியாயமாய்க் கிளப்பிவிட்டுவீண் மனக்கொதிப்புக்கிடமேற்படச்செய்திருப்பதற்குக் காரணம், காலக்ஷேபக்காரர்களுடையவும், நாடகக்காரர்களுடையவும் அறிவின்மையல்லாது வேறென்னென்றுரைப்பது?

ஆண்டவனைப் பேரன்பினால் வழிபட்டு அவன் அருளாகியபேரின்ப வாரிதியில் ஆழ்ந்த பெரியார்கள், உலகிலுள்ள ஏனையோரும், தம் வழி நின்று இன்புற்றுய்யவேண்டுமென்றநோக்கத்துடன், ஈசுவரார்ப்பணமாக அருளிச்சென்று இதுபோன்ற அரிய நூல்களின் பிரசாரத்தை மேற்கண்ட வீண்மக்கள், சந்தை, கடைத்தெரு போன்ற கூட்டம் சேருமிடங்களில் சரித்திரங்களை விக்ரயப்பொருள்களாக வைத்து, அகமுகநோக்கற்று ஸதாஸர்வகாலம் "தமாஷ்" என்பதிலேயே பொழுது போக்கும் மனப்பான்மையுள்ளவர்களைப் போலிஇன்பத்தால் மயக்கி வயிறுவளர்க்கின்றனரே. குருடனுக்குக் குருடன் வழிகாட்டி இருவரும் குழியில் வீழ்ந்தனர் என்பதற்கொப்பாகவன்றோ இருக்கிறது இவர் செய்கை!

வேறுவழியில் பிழைக்கத்தெரியாமலும், போதிய கல்வியறிவு, ஆற்றலின்மையால் சரித்திர ஆராய்ச்சியற் புகுந்துபார்க்க வழியற்று பிதற்றும் இவ்வீண் மக்களின் பொருப்பற்ற பிரசாரத்தாலன்றோ, ஆபாலவிருத்தர்கள் நம் நாட்டில் நந்தனார்சரித்திரக் கீர்த்தனைகளையே ஆதாரமாகக் கொண்டு இக்கதையைத் தாறுமாறாய்ப்பிதற்றுகின்றனர். முதல் நூலுக்கு

வழிநூல் முரண்பட்டுக்காணும் அம்சங்களனைத்தையும் இரக்கமின்றி புறக்கணித்து உண்மையைத்தாமுணர்ந்து பிறர்க்கும் உணர்த்துவது அறிவாளிகளின் இயற்கையாகும்.

இவ்வுபந்யாஸம் முடிந்ததும், ச்ரோத்ருகோஷ்டிகளில் ஒருவர், "இச்சரிதம் போலவே ஸ்ரீமத் வால்மீகி ராமாயணமும். மேற்கண்ட வீணர்களின் கையிலகப்பட்டு அனர்த்தங்கள் பலவற்றிற்குப் பாத்ரமாய் விட்டிருக்கிறதென. ஸீதாகல்யாணத்தில் ராவணன் வருகை, ஐம்பத்தாறு தேச அரசர்களை, ஆள்வாரியாய் ஸீதைக்குச் சுட்டிக்காட்டி, கல்யாணம்செய்து கொள்கிறாயா எனக்கேட்பது, அகல்யாதேவி கல்லாய்ச்சபிக்கப்பட்டாள் என்பது, கல் பெண்ணாயிற்றென்பது, இந்திரன் தேகமுழுமையும் யோனி உருவங்கள் காணப்பட்டன வென்பது லக்ஷ்மண சக்தி என்றுபெயரிட்ட கதையில் பலதவறான ப்ரஸ்தாபங்கள், ஸுலோசனாஸதி என்ற கதை இவை ஸ்ரீராமாயணத்திலுள்ள கதைகளென, மேற்கண்ட வீண்மக்களால் பிரசாரஞ்செய்யப்படுபவை முற்றும் ஆதாரமற்றவை என எடுத்துக்காட்டி இவைபோன்ற நாடக காலக்ஷேபங்களைக்கண்டு கேட்கநேரும் அறிவாளிகள் துணிவுடன் அவ்வப்போது எடுத்துக்காட்டி கேட்போருக்குணர்த்த வேண்டுவது மிகமுக்யமான கடமையாகுமெனவும், பொதுஜனங்களின் மனதில் பதிந்துள்ள இத்தப்புக்கதைகள் தீவிரப்பிரசாரத்தாலும் பத்திரிகைகளின் பிரசுரங்களாலும் தாமதமின்றி மாற்றப்படவேண்டுவது மிக்க அவசியமெனவும் கூறினார்

**K. R. சுப்ரமண்ய சாஸ்திரி,**
காரியதரிசி.

# ஆந்ஹிக க்ரமம்.

நமது நாட்டிற்கு கர்மபூமி எனப்பெயர். நமது மதம் அநாதியாயுள்ளது. ஆதலால் ஸநாதநதர்மம் எனப்படுகிறது. இப்பிறப்பில் இன்பமூட்டி மறுபிறப்பிலும் மாசற்ற சுகமளிப்பது மதம். அதற்கேற்ற வழிகளைக் காட்ட ஆதாரமான நூல் வேதம். அவ்வேதம் வகுத்தவழி மூன்று. கர்மா பக்தி அல்லது உபாஸனை, ஞானம் என்பனவாம். கர்மாவும் நித்யம் நைமித்திகம் காம்யம் என முவகைப்படும். புத்ரன் மித்ரன் களத்ரம் பூமி பொன் கீர்த்தி முதலியவைகளைக் கோரிச் செய்வது காம்யமாம். க்ரஹணம் முதலிய நிமித்தங்களில் செய்வது நைமித்திகமாம். பிரதிதினம் அல்லது ஓர் புருஷாயுவில் செய்தே தீரவேண்டியவை நித்யங்களாம். கர்ப்பாதானாதி ஸம்ஸ்காரங்கள் நித்யமானாலும் ப்ரதிதினம் செய்யவேண்டியவைகளுக்கு ஆஹ்நிகம் எனக்காரணப்பெயரிடப்பட்டது. வேதத்தை ஆதாரமாகக் கொண்டு அதன் பொருளை நினைத்து ஆண்டவன் ஆணைப்படி மஹரிஷிகளால் எழுதப்பட்டவை ஸ்மிருதிகளாம்

அவை அநேகம் ஆனாலும் மனு யாக்ஞபவல்க்ய சங்கலிகித பாராசர் என்ற நாலும் மிகப்பிரசித்தங்களாம். இவை முறையே கிருத திரேதா த்வாபர கலியுகங்களுக்குப் பிரமாணமானவைகள். தர்மத்தை வெளியிடும் கிருஹ்யதர்மசூத்ரங்கள் தர்மசாஸ்திரங்கள் புராணங்கள் இவைகளைக் கொண்டு வைத்தியநாத தீக்ஷிதர் என்ற பெரியார் ஸ்மிருதிமுக்தாபலம் என்ற நூலை இயற்றினார். அதில் தினந்தோறும் செய்யவேண்டிய கர்மாக்களைக் கூறுவது ஆந்ஹிகக்காண்டம். அதைத் தழுவி நித்யகர்மாவை ஏன்? எப்படிச் செய்யவேண்டும்? செய்யாவிடில் வருந்தீமை என்ன என்பதை முறையே சுருக்கமாகமந்திரார்த்தத்துடன் விளக்குவதோடு, யுக்தி அநுபவ பூர்வகமாக எதைகுறைந்த பக்ஷம் செய்தல் ஸாத்யம்? எதை விட்டால் அநர்த்தம் நேரும் என்பதையுங் கூறுவாம். இது ஆபத் தர்மமாகக் கூறப்படுவதால் இதே பூர்ணமான சாஸ்திரம் என்று பெரியார்எண்ணலாகாது. மனிதர்கோரும்பலமோ தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நால்வகைப்படும். ஸ்மிருதிகளோ இதற்குக்காட்டும்வழி அனேகம் ரிஷிகளோ்நியாயம். வைசேஷிகம் முதலிய ஆறு தர்சநங்களைத் தோற்றி வைத்தனர். ஆதலால் நற்கதி விரும்பும் ஒருவன் ஆங்காங்கு சென்றுத் திரிந்து அலையாது சிஷ்டர் கைப்பற்றிய வழியைத் தொடர்வதே மேல். சுருக்கமானாலும் முறை தவராது ஆந்ஹிகத்தை அநுஷ்டித்துப் பேரானந்தம் வரைப் பெறுவது உசிதமாகும்.

## காலை எழுந்திருத்தல்.

ஒவ்வொரு தினத்திலும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். தினமொன்றுக்கு அறுபது நாழிகை. பகலில் முப்பதும் இரவில் முப்பதுமாகும். தற்காலக் கணக்கு தினத்திற்கு இருபத்துநான்கு மணியானால் ஒரு மணிக்கு இரண்டரை நாழிகை ஆகின்றது. இரவை ஆறாகப்பிரித்துக் கடைசி பாகத்தை அதாவது இருபத்தைந்தாவது நாழிகையை ப்ராம்ம முகூர்த்தமென்கின்றனர். அதே பஞ்ச பஞ்ச (ஐம்பத்தைந்து) உஷஹ் காலமெனப்படுவது. அந்த முகூர்த்தத்தையும் இரண்டாகப் பிரித்து ஒருபாதி ப்ராஹ்மமும் மற்றொன்று ரௌத்ரம் எனவுங் கூறப்படுகிறது. அச்சமயம் எழுந்துவிட வேண்டும். தூங்கலாகாது. அது தேவர்களும் பித்ருக்களும் ஸந்திக்கும் காலமாம். அச்சமயம் எந்த வீட்டில் தூங்குகிறார்களோ அது வீடல்ல. சுடுகாடு எனப் பித்ருக்கள் அருள் புரியாது விடுகின்றனர். உறங்குபவன் புண்ணியத்தைத் தூக்கம் கொண்டுபோய் விடுகிறது. லக்ஷ்மீ விலகுவாள். அலக்ஷ்மீ (மூதேவி) வருவாள். எவன் ஸூரியாஸ்தமன காலத்தில் தூங்குகிறானோ அவன் அபிநிர்முக்தன். உதய காலத்தில் தூங்குபவன் அபியுதிதன். இவ்விருவர்களும் ஒரு நாள் உபவாஸமிருந்து உடல்களைக்கும் வரை ப்ராணயாமம் செய்யவேண்டும். என வேதத்தின் கருத்தை தர்மநூல் வெளியிடுகிறது.

நித்ரை என்பது அன்றன்று நமது ஜீவன் பரமாத்மாவுடன் சேர்ந்து உயிருக்கும் உடலுக்கும் உறமூட்டுவதாம். சிறுவர்களுக்கு அதிகமும் பெரியோர்களுக்கு வயதிற்கேற்கக் கொஞ்சமுமாகத் தூக்கம் அவசியமென ஆரோக்கிய சாஸ்திரம் கூறுகிறது. அளவிற்கு மிஞ்சினல் அமிருதமும் நஞ்சாகும். அதிக நேரம் உறங்கினல் ஓர் திமிர்வாயு உள்ளே புகுந்து உடலிற்கும் மனதிற்கும் ஓர் தடித்தனத்தை உண்டுபண்ணிவிடும் சுறுசுறுப்பையகற்றிவிடும். இது நாம் அநுபவத்தில் காணும் குற்றமாம். பழைய மலம் அளவிற்கு மேல் உள்ளே தங்குவதால் அதிலிருந்து கிளம்பும் துஷ்டவாயு கண் முதலிய இந்திரிய கோளங்காளின் சக்தியைக் குறைத்து விடுகிறது. ஆதலால்தான் பகலில் உறங்கக் கூடாதென வைத்திய நூலும் தர்மநூலும் ஒருமிக்கக் கூறுகிறது.

## காலை ஸ்துதி.

எழுந்தவுடன் சென்ற தினத்தில் என்ன புண்ணியம் செய்தோம்? யாருக்கு என்ன கொடுத்தோம்? உண்மையாவது உறைத்தோமா? இன்று நாம் எதைச் செய்யவேண்டும். மரணம் வியாதி சோகம் இதில் எது நேருமோ? எப்படித் தடுப்பது? இது முதலியவைகளைச்சிந்திக்க வேண்டும். பின்னற் ப்ரும்மாமுராரி திருபுராந்தகர் நவக்ரஹங்கள் ஸப்தரிஷிகள் ஸநகாதிகள் ஸப்தஸ்வரங்கள் ஸப்த ரஸாதலங்கள் ஸப்தார்ணவங்கள் ஸப்தகுலாசலங்கள் ஸப்த உபவனங்கள் முதலியவைகளைக்குறிக்கும் ப்ரும்மாமுராரி என்பவை சுலோகங்களைக் கூறி எல்லோரும் எனக்கு நல்ல தினத்தையளிக்கட்டுமெனப் பிரார்த்திக்க வேண்டும். அச்சமயம் மற்ற சப்தங்களிராது. மநதும் தெளிந்து நிர்மலமாயிருக்கும். அப்போது பகவானை ஸ்மரித்தால் கடவுளருளை எளிதில் பெறலாம். மநம் ஏகாக்ரப்பட்டிருப்பதால் பக்தி செய்யவோ படிக்கவோ இவ்வுலகிற்கு வேண்டி எவ்விஷயத்தைப் பற்றி சிந்திக்கவோ தக்க காலமாகும். விடிந்த பிறகு பற்பல விஷயங்களிடத்தில் பஞ்சேந்திரயங்கள் மூலமாக மநம் பங்கிடப் படுவதால் ஏகாக்ர சித்தமிராது. ச்ரோத்ரியன் ஸுமங்கலி கண்ணாடி அக்னி, யாகம் செய்தவர், கோ, ஹிரண்யம், முதலிய நல்லவைகளைக் கண்டால் நற்பொழுதாகப் போகும். முறம், துடப்பம், விதவா, அங்கஹீனன், வஸ்திரமில்லாதவன், முதலியவர்களைப் பார்த்தால் நல்லதல்ல. (தற்காலத்தவர் மேனாட்டு முறைமையை யொட்டி ப்ரதிதினம் டைரி அதாவது தான் செய்த ஸகல காரியங்களையும் பதிவது என்ற ஓர் பழக்கத்தை பற்றுகின்றனர். ஈசன் வடிவமாகக் காணுமூலகத்தில் அவனது பணியான தர்மத்தை மனதிலே பதி என்றனர் மஹரிஷிகள். அதை நினைத்தால் பாபத்தில் மநம் செல்லாது.

## மலஜலக்கழிவு.

ப்ராணிகளில் உயர்ந்தவர் மானிடராதலால் தனக்காகவும் பிறருக்காகவும் ஸமூகத்திற்கும் கட்டுப்பட்டு எவ்வேலையும் செய்யும்படி நியர்

தனைகள் ஏற்பட்டுள. ஆதலால் தான் ஸாமான்யமான இவைபோன்ற ஸகல தேஹ காரியங்களில் கூட சாஸ்திரம் உள்ளே புகுந்தது. தலையைத் துணியால் போர்த்துக் கொண்டு யக்ஞோபவீதத்தை நிவீதமாக (மார்பில் மாலைபோல்)ச் செய்து அசுசியாகாமலிருப்பதற்காகக் கழுத்திலோ வலது காதிலோ சுற்றிக் கொண்டு வீட்டை விட்டு வெகு தூரம் சென்று இரவில் தென்முகமாகவும் பகலில் வடக்கு முகமாவும் உட்கார்ந்து வாயால் மூச்சுவிடாமல் ஜலமலங்களைக் கழிக்க வேண்டும். எவருடனும் பேசக் கூடாது. யாகத்திற்கு உதவாத புற்களால் பூமியை மறைத்து அதன் மேல் கழிக்கவேண்டும். வழியில் தேவாலய நதி ஸமீபத்தில் வாயு அக்னி, விப்ர, ஆதித்ய ஜலங்களைப் பார்த்துக் கொண்டு ஜலத்தில் சுடு காட்டில், சாணியில், புத்தில், தர்ப்பை ஸ்தலத்தில் தான்ய மத்தியில் மரத்தினடியில் கரி, சாம்பலில் இதுபோன்றவிடங்களிலும் ஜலமலங்களைக் கழிக்கக்கூடாது. ஈர வஸ்திரத்துடனும் கீழ்க்கண்டதகாத விடங்களிலும் கழிப்பவர் ப்ராணயாமம் முதலிய பிராயச்சித்தங்களால் சுத்தனாகிறான்.

தடுக்கப்பட்ட விடங்களில் இக்காரியங்களைச் செய்தால் மற்ற மஹாஜனங்களுக்கும் சுகாதாரம் கெட்டு துஷ்கிருமிகள் கிளம்பி பல நோய்களையுண்டு பண்ணும் இதற்கு வைத்திய ஸம்மதியோ பெரியாரனுபவமோ தேட வேண்டிய அசியமில்லை. நகரவாஸிகள் படுந்துன்பத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கலாம். ஜலம் பூமி காற்று இவை சுத்தமில்லாவிடில் ஆரோக்யம் அன்றே கெடுவதைக் காணலாம்.

## சௌசம்.

அகச் சௌசம், புரச்சௌசம், என இருவகையுண்டு. மநஸ் நரம்புகள் முதலியவை சுத்தமாவது அகச் சௌசம், வெளித்தேகம் நவத்வாரங்கள் சுக்தமாவது புரச்சௌசமாகும். மணல், புத்துமண், சேறு, உப்புமண் வழிமண் எலிவளை மண் முதலியவைகளை விட்டு நல்ல மண்ணாக எடுத்து ஜலத்தைப் பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு மறைவானவிடத்தில் சுத்தி செய்து கொள்ள வேண்டும். குடி தண்ணீரில் உட்கார்ந்து அசுத்தம் செய்யலாகாது. கரையில் உட்கார்ந்து வலது கையால் நீரை எடுத்து இடது கையால் சுத்தி செய்து அவ்விடத்தை நன்றாகக்கழுவ வேண்டும். விஸர்ஜன காலத்தில் கையில் வைத்திருந்தால் அந்த ஜலம் அசுத்தமானது. சௌசத்திற்கேற்றதல்ல. ஆஸநனத்தில்ஐந்தும் பதினேழு இடது கைக்கும் வலதில் எழும் லிங்கத்தில் இரண்டும் மண்ணிட்டு ஜலத்தால் அலம்பவேண்டும். பல வகையாகக் கூறப்படினும் இதற்குக் குறைந்தது சுசியாகாது. மலம் நாற்றமிருந்தால் அது நீங்கும் வரை சுத்தி செய்யவேண்டும்.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவசர்மா.